சிலிண்டர் தட்டுப்பாடு : ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!

கழகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் பங்கேற்பு!

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு,தெற்கு மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் எரிவாயு சிலிண்டர் (எல்.பி.ஜி) தட்டுப்பாட்டை கண்டித்தும் பா.ஜ.க. மோடி அரசை கண்டித்தும் பல்லாவரம் பேருந்து நிலைய அருகில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை கழக குழு தலைவர் டி. ஆர். பாலு கண்டன உரை நிகழ்த்தினார். தி.மு.க. காங்கிரஸ், ம.தி.மு.க., கம்யூனிஸ்ட், தே.மு.தி.க. உள்ளிட்ட மதசார்புற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் தாய்மார்கள் என பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டார்கள்.

திருவண்ணாமலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், தமிழ்நாட்டிற்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணியைக் கண்டித்தும், 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டோர் ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சி.பி.எம். என்.பாண்டி, காங்கிரஸ் கே.குணசேகரன், சி.மூர்த்தி, மதிமுக சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. வி.எம்.நேரு, சி.பி.எம். ப.செல்வம், சி.பி.ஐ. இரா.திருமலை, வி.சி.க., சி.நியூட்டன், மு.லீக் ஜ.எம்.சுலைமான், ம.ம.க., நாசர் உசேன், மக்கள் நீதி மையம் இரா.அருள், தா.வா.க., மல்லி வினோத், எஸ்.டி.பி.ஐ ஏ.முஸ்தாக் பாஷா, ம.ஜ.க., கேட் குமார், ஆதி தமிழர் எஸ்.கந்தன் மற்றும் ப.கார்த்திவேல்மாறன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், சி.மாரிமுத்து உட்பட பலர் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் செங்கல்பட்டில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்களும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளும் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இராணிப்பேட்டை மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் அமைச்சர் – மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது . இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி மற்றும் ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி, தேர்தல் தொகுதி பொறுப்பாளர்கள் ஆதிசேஷன், வழக்கறிஞர் பாஸ்கரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்க கோரியும் தமிழகத்திற்கான திட்டங்களை வழங்காமல் வஞ்சிக்கும் கூறப்படும் ஒன்றிய அரசை கண்டித்து பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பாக கழக முதன்மை செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளரும், மாநகர மேயருமான அன்பழகன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. கூட்டணி கட்சிகளின் சார்பில் கடலூர். தலைமை அஞ்சல் நிலையம் அருகில், ஒன்றிய மோடி அரசை கண்டித்து, அமைச்சர் எம். ஆர் .கே. பன்னீர்செல்வம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் மாவட்ட, மாநகர,ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அண்ணா திடலில் முதலமைச்சர் ஆணையின் பேரில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு காரணமான ஒன்றிய அரசை கண்டித்து சேலம் கோட்டை மைதானத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமையில் மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடை பெற்றது